**தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 1.6.1(அ), (ஆ)(i), (இ) மற்றும் (ஈ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் வைப்புப் பெறுவனவாக காண்பிக்கப்பட்ட ரூபா 50,267 பெறுமதி திணைக்கள புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் மூலம் முன்னைய ஆண்டுகளின் வருடாந்த கணக்கு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட முறையில் 2022 ஆம் ஆண்டின் போதும் வைப்பு பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக இனங்கண்டு புத்தகங்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவிடல்கள் ரூபா 5,043,464 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய முற்பணங்களை அறவிட்டு வரவுக் குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டின் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரவு பதிவுகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய செலவின தலைப்பிற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 5,677,348 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 4,779,128 ஆக குறிப்பிடப்பட்டமையால் ரூபா 898,220 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏனைய செலவின தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யும் போது தலைப்பு இலக்கம் 130 இன் கீழ் பயிலுனர் பட்டதாரிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை உள்ளடக்கியிருந்தது. 2022 மார்ச் மாதம் முதல் உரிய உத்தியோகத்தர்களுக்காக சம்பள முறைமை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. | 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இலக்கம் 2022/05 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வரவு பதிவுகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 47,765,312 ஆன வைப்பு கணக்கின் மீதி திணைக்கள புத்தகங்களில் பதியப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி 30 ஆம் அட்டவணையின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளில் காண்பிக்கப்பட்ட முறையில் இந்த விடயங்களின் பெறுமதி ஏசீஏ 4 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைப் பொறுப்புக்கள் என்ன என இனங்கண்டு புத்தகங்களில் குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி 52 ஆம் அட்டவணை மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண பெறுவனவாக ரூபா 6,214,614 காண்பிக்கப்பட்டிருந்ததுடன், திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ரூபா 6,245,994 ஆகும். ரூபா 31,380 ஆன வேறுபாடு கட்டுநிதி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்களை எதிர்வரும் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | வேறுபாடுகள் கட்டுநிதி இணக்கக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் வைப்புப் பேரேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியான பதிவுகளை உள்ளடக்குவதற்கு தேவையான ஆலோசனைகள் உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளது. | உரிய வைப்புப் பேரேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு இலக்குகள் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான முறைமையொன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் நிதிப் பிரமாணம் 756(6) | - | 2023 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதி வரை திணைக்களத்தின் 07 மாவட்ட அலுவலகங்களின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக உரிய பொருள் மெய்மெய்யாய்வு குழு தலைவருக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தின் வழிகாட்டி இலக்கம் 12 இன் படி 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளது வரையாக்கப்பட்ட திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டி இலக்கம் 12 இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய ஆவணங்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை நாளதுவரையாக்கி நிறுவனக் கட்டமைப்பு உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அதன் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 13 ஆவது பந்தியின் பிரகாரம் அதற்காக உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டில் இருந்து சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனரல் இற்கு சமர்ப்பிப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அறிக்கையிடப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒப்பந்த அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளர் பதவியின் கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தரின் ஒப்பந்த காலம் 2021 செப்டம்பர் 06 ஆம் திகதி முடிவடைந்ததுடன், பதவி வெற்றிடமாக காணப்பட்டதன் காரணமாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | திணைக்களத்தின் 2023.01.31 ஆம் திகதிய மீபிரா/2/2கண/பொது ஆம் இலக்க கடிதம் மற்றும் கடிதம் மற்றும் 2023.02.24 ஆம் திகதிய MT/DEV/04/03/04 ஆம் இலக்க கடிதம் மூலம் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் II/II அல்லது II/I உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/2019 என்ற சுற்றறிக்கை 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் காலாண்டுக்கு ஆகக் குறைந்தது ஒரு கூட்டம் வீதம் வருடாந்தம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 04 நடாத்த வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 செப்டம்பர் 06 இன் பின்னர் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 368 ஆகவும், உள்ளபடியான எண்ணிக்கை 287 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 81 ஆக காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிரேஷ்ட நிலையில் 09 பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 08 உம் (பிரதி பணிப்பாளர், உதவி பணிப்பாளர்) அதாவது 42 சதவீதம் 11 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவியணியினரை தேவையின் பிரகாரம் பதவிகளை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலையில் 30 பதவிகளில் 26 பதவிகள் அதாவது 87 சதவீதம் 04 வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | இந்த பதவியணியினர் வெற்றிடங்கள் திணைக்களத்தின் செயலாற்றலுக்காக பாதகமாக தாக்கமளித்திருந்ததுடன், அது தொடர்பாக மீளாய்வு செய்து பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை தேவையின் பிரகாரம் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |